DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: Cr.M.P. No. 671/2024 |
| Session | ... | |
| | | Prosecution / PW-1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சங்கர் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.பெரியநாயகம் |
| Village | : | குணபதிமங்கலம் |
| Taluk | : | திருவாடானை |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 19.03.2024

---

**முதல் விசாரணை**

1. நான் இந்த மனுவின் புகார்தாரர் ஆவேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். பழனி மகன் முருகேசன், முருகேசன் மகன் விஸ்வநாதன், முருசேன் அக்கா பாப்பா, முருகேசன் மனைவி தேன்மொழி ஆகியோர்களுக்கும் எங்களுக்கும் ஏற்கனவே இடப்பிரச்சனை இருந்து வந்தது.

2. இது சம்பந்தமாக நான் வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்து அதன்பேரில் சர்வேயர் வந்து இடத்தை அளந்து கல் ஊன்றி சென்றவிட்டார்கள். அதன்பிறகு சிறிது நாள் கழித்து 04.02.2023ம் தேதி முருகேசனும், விஸ்வநாதனும் இருவரும் ஊன்றியிருந்த கல்லை பிடுங்கி போட்டு சென்றுவிட்டார்கள்.

3. மறுநாள் காலையில் 05.02.2023ம் தேதி ஊர் முக்கியஸ்தர்களிடம் கூறினேன் அவர்கள் எதிரிகளிடம் கேட்டு சொல்கிறேன் என்று சொன்னார்கள். அன்றைய தினம் மாலை 06.00 மணியளவில் நான் கடைக்கு சென்று வந்தபோது சம்பவ இடத்தில் இருந்த முருகேசனும் விஸ்வநாதனும் ஒன்று சேர்ந்து என்னை வழிமறித்து ஏண்டா ஊர்க்காரர்களிடம் பஞ்சாயத்து வைக்கிறாய என்றும் நோத்தா, நொம்மா என்று அசிங்கமாக பேசி, கட்டை, கம்பை வைத்து எனது இடது தோள்பட்டையில் அடித்தார்கள்.

4. நான் வலிதாங்க முடியாமல் சத்தம்போட்ட போது அங்கிருந்த எனது அம்மா ஓடி வந்து விலக்கிவிட்டார். அப்போது விஸ்வதநாதன் எனது அம்மாவை கீழே தள்ளிவிட்டு எனது அம்மாவை காலால் மிதித்தார். அங்கிருந்த முருகேசன் அக்கா பாப்பா என்பவர் முள்ளு கம்பால் என்னை முதுகில் அடித்தார்.

5. முருகேசன் மனைவி தேன்மொழி என்னை கெட்ட வார்த்தைகளால் கேசி விலக்குமாறை கொண்டு என்னை அடித்தார். இந்த சத்தம்கேட்டு எனது மனைவி சத்தியபாமா, முனிஸ்வரன், கார்த்தி ஆகியோர்கள் வந்து என்னை எதிரிகளிடமிருந்து என்னை காப்பாற்றினார்கள். அப்போது எதிரிகளான முருகேசனும், விஸ்வநாதனும் உங்கள் குடும்பத்தை கொன்று புதைக்காமல் விடமாட்டோம் என்று கொலைமிரட்டல் விடுத்தார்கள்.

6. பின்னர் எனது மனைவி, முனிஸ்வரன், கார்த்தி ஆகியோர்கள் என்னை திருவாடானை அரசு மருத்துவமனைக்குகொண்டு வந்துசிகிச்சைக்கு சேர்த்தார்கள். மறுநாள் 06.02.2023 ம் தேதி தொண்டி காவல் நிலையத்தில் நான் புகார் அளித்தேன். அவர்கள் ரசீது மட்டும் கொடுத்தார்கள் ஆனால் எதிரிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

7. மறுபடியும் 20.04.2023 ம் தேதி தொண்டி காவல் நிலையத்தில் நான் அளித்த மனுவிற்கு நடிவடிக்கை எடுக்கக்கோரி இராமநாதபுரம் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு மனு அளித்திருந்தேன். இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. எனவே இந்த தனிப்புகாரை எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி தாக்கல் செய்கிறேன்.